1st August 1966]

உறுப்பினர்கள் :

(2) ஆதிவாசி வளர்ச்சி வட்டாரங்களில் மேம்பாட்டிற்க., கோட்டப் பொறியியல் தனி அதிகாரி.

(3) மாவட்டச் சுகாதார அதிகாரி, சேலம்.

(4) மாவட்ட நல அதிகாரி, சேலம்.

(5) வருவாய்த் துறைக் கோட்ட அதிகாரி, சேலம்.

(6) திரு. எம். எஸ். பி. ராஜேஸ், ஏற்பாடு பஞ்சாயத்து மன்றத்தின் முன்னாள் தலைவர்.

(7) ஸ்ரீ அய்யாசாமிப் பிள்ளை.

(8) ஏர்க்காடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்.

(9) திரு. பி. கே சின்னசாமி, முண்டகம்பாடி

பற்றுள்ள அனைவருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஏர்க்காடு பகுதியில் நிறைய காப்பித் தோட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள் அங்கு நிறைய இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு இதில் ஏன் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கூடுமான வரைக்கும் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது தான் கருத்து. இதில் நான் அபிசியலாக இருப்பது நான்கு பேர்கள். இதில் எல்லோருடைய இன்டரஸ்டுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் தான் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, ஏர்க்காடு வட்டாரம் முழுவதும், அதாவது அந்த பிளாக் முழுவதும் டவுன்ஷிப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. இவ்விதம் இல்லாமல் குறுகிய ஒரு சில மைல்கள் சுற்றளவுக்கு மட்டும் டவுன்ஷிப் அமைத்துவிட்டு மற்ற இடங்களை எல்லாம் வட்டார அபிவிருத்தியிடமாகவே விட்டுவிட்டால் தான் சௌகரியமாக இருக்கும். அதன் மூலம் அந்தப் பகுதி பலன் அடைய முடியும் என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சொல்லு கிறார்களே, இதைப்பற்றி அரசாங்கம் கவனித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது சம்பந்தமாக ஒரு ரிட் ஹைகோர்ட்டில் இருப்பதால் இதைப்பற்றி மேலும் நான் பதில் அளிக்க விரும்பவில்லை.

Bus-stand for Tiruchengode Town

* 20 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to construct a bus-stand in Tiruchengode Town?

[1st August 1966

காண்HE HON. SRI S. M. A. MAJID : Yes, Sir.

அடி

திரு. வை. சங்கரன் : பல்வேறு திசைகளில் போகின்ற பஸ்கள் பல இடங்களில் போய் நிற்கின்றன. இதன் காரணமாகப் பொது மக்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே ஒரே இடத்தில் நிறுத்துவதற்கு வசதியாக உடனடியாக இந்த ஏற்பாடு செய்யப் படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட ஜில்லாக் கலெக்டர் அவர்கள் இதைப்பற்றி நேரிடையாகப் பார்வையிட்டு, ரிப்போர்ட் அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றித் தக்க கவனம் செலுத்தப்படுகிறது. இதில் இருக் கின்ற கஷ்டம் என்னவென்றால், ஒவ்வொருவரும், தங்கள் வீட்டின் பக்கத்தில் பஸ்கள் நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

MR. SPEAKER : I have to announce that I have received from the Hon. Leader of the Opposition, notice of a no-confidence Motion against the Council of Ministers.

திரு. இரா. நெடுஞ்செழியன் எழுந்தார்.

II. POINT OF PROPRIETY *re*. BREACH OF CONVENTION IN PREMATURE PUBLICATION OF CONTENTS OF NO-CONFIDENCE MOTION IN THE PRESS.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபிக்க இருக்கிறார்கள். அதைப் பிரேரேபிப் பதற்கு அவர் அனுமதி கோருவதற்கு முன்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கனம் எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் இப்போது தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு இந்த மன்றத்தின் அனுமதியைக் கோர இருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரப்போ கிறது என்ற செய்தி மட்டுமல்ல, எந்தெந்தக் காரணங்களுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது என்கின்ற செய்தியும் வெளிவந்திருக்கிறது. நான் டெல்லியில் இருந்தபோது டெல்லி பத்திரிகைகளில் வெளிவந்ததைப் பார்த்தேன். பம்பாய் பத்திரிகைகளிலும் பார்த்தேன். தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைகளிலும் இந்த விவரங்கள் வெளிவந்திருக்கின்றன. தங்களுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகிறேன். 1964-ல் இந்த மன்றத்தில் ஒரு சிறந்த சம்பிரதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் முடிவு எடுத்திருக்கிறோம். கேள்வி கேட்ப தாக இருந்தாலும் சரி, மோஷன் கொண்டு வருவதாக இருந்தாலும் சரி, இந்த மன்றத்தில் தெரிவித்த பின்னால்தான் பத்திரிகை களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று தாங்களும் கூறியிருக் கிறீர்கள். தாங்கள் இதைக் கூறும்பொழுது, பாராளுமன்றத்திலும்